நபிகள நா கமும

நானகு தோழாகளும

2155

691

By

பா. தாவுத்ஷா.

சென்னை

ப்பி ரட்

ப டக்ஸி

ப 1 0.] [ண்டு ೧ 0 0.

எமத புத்தக ! ளா.

1. தாருல் இ மபு த லே
16 17 க்கி ' டு லே ' பீச் செ ' னே

2. தேச மித்திர புத்த சாலே,
P. O. Box 126, செ ' னே.

3. எம. ஏ. ஷாஹு லஹமீ & ஸ ' '
10 ஹரோட் திரு ல்லிக்கேணி, சென்னே.
1 ஹாஜீலேன் சி ' கப்பூர்.

4. வீ தா புத்த ச லே
121 122, ' ாசி வீதி இர ' கூ ' .

5. பகு ச ' தி புத்த சாலே
40 28 தூ தெரு இர ' கூ '

முதலி பல இட ' விலு கிடைக்கு .

ிஷய சூசிை .

அத்	விஷயம.	ப ம
	மு ை	i
	ம்ச ழிப்பட்டி	iv
1.	அரபு ாடும் ஆதி ாலமும்	1
.	நபி அ தாரமும் இ லாமிய போதமும் ...	15
3.	நபி ள் பெருமானும் மதீனு ாழ் ை யும் ...	33
4.	அபூப ர் ஸித்தி (ரவி)	54
5.	உமரெபாரூ (ரவி)	74
6	உது ானும் அலீயும் (ரவி)	102
7	குடியரசின் குணுதிசயம்	1 3
	ப டை தேசப்படம்	142

தாருல் இஸ்லாம்

இஃதோர் உயர்தர நூதன இஸ்லாமிய முதற்றர
மாதாந்தரப் செந்தமிழ்ப் பத்திரிகை.

தமிழ் நாட்டுச் சகோதர சகோதரிகாள். 'தாருல் இஸ்லாம்' இன்னதென்பதை இது வரையில் நீங்கள் தெரிந்து கொண்டிருக்கிறீர்களா?

இஸ்லாத்தின் உண்மைக் கொள்கைகளை யெல்லாம் உள்ள படியே நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டாமா? குர்ஆன் ஷரீபிலும் ஹதீது ஷரீபிலும் கூறப்பட்டிருப்பது இன்னதெனத் தெரிந்து கொள்ள வேண்டாமா? இஸ்லாத்திலுள்ள ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை இன்னதென அறிந்துகொள்ள வேண்டாமா? இஸ்லாத்தின் சரசக்கொள்கை இன்னதென்பது உங்களுக்குத் தெரியுமா? இஸ்லாத்தின் தேசிய ராஜீய ஞானமும் இன்னதெனத் தெரிந்துகொள்ள வேண்டாமா? முஸ்லிம் உலகமுழுதும் நடைபெறும் முக்கியமான விஷயங்கள் இன்னவையென அறிந்துகொள்ள வேண்டாமா? இஸ்லாத்தில் இது வரையில் தோன்றியுள்ள பெரியோர் ளின் சரித்திரத்தையு ங் ள் படித்தறிய வேண்டாமா?

இவை யெல்லாம் வே ண்டுமாயின் எமது "தாருல் இஸ்லா த்தைப் படியுங்கள். இதன் முதற்பக் முதல் இறுதிப் ப க வ ர யில் அதிரஸமான அபூர்வ விஷயங்களை முழுது ததும்பி கிட கும். இ லாத்தின் பக்தி மார்க்கமும் ஞான மார்க்கமு இ இன்ன யென்ப தயும் இதன் மூல செவ் னே தெரிந்து கொ ளுவீர்கள்.

இதில் குர்ஆன் ஷரீபின் மொழி பெயர்ப்பும் இப்பொழுது தொட ர்ச்சியாக வெ ளி வந்து கொ டிருக்கிறது.

இது நுஷ் சநதா ந . | ோ நாட்டிறது 4.
மா ா க்கு ந 2. | தனிப்பிரதி விலை அணு 4.

விலாச :

மானே ர் 'தாருல் இ லாம் ஆபீ
16 17 டு லை பிச் ரா .

முகவுரை

நாயகமான்மியம்" என்றொரு நபிகள் பெருமானின் சரித்திர மொன்று எழுதவேண்டுமென்று எமக்கோர் ஆர்வம் நெடுநாளாகவே தழைத்தோங்கி வந்தும் இன்றளவும் குர்ஆன் ஷரீபின் மொழி பெயர்ப்பானது அதிதுரிதமாக நடைபெற்று வருவதால் அந்த "நாயகமான்மிய ே லையானது சிறிது தடைபட்டு நிற்கின்றது. ஆயினும் நபிகள் நாயகத்தின் சரித்திரமும் அவர் ளுடைய தோழர்களுள் முதன்மையான முக்கிய கலீபா களின் சரித்திரமும் இக்காலத்துக்கு இன்றியமையாதை யெனக் க டு இப்பொழுது இச்சிறுநூலை முதன் முதலா எழுதி வெளியிட முன்வந்தோம். இச்சிறு நூலில் அ ர்களுடைய ஜீவிய சரித்திரமும் ராஜீய நிலையொழு கும் பூர்த்தியா வருணிக் முடியாமற் போயினும் ஆரம்பமா அன்னாரின் விஷய ளில் இற குவோர் அறிந்துகொள்ள வே டிய அ சியமான குறிப்பு களெல்லாம் விடாமல் இதில் நுழை ப்பட்டிருக்கி றன. மேலும் இனி எம்மால் வெ ளிவர இரு கும் 'நாயகமா மியம் என்னும் விஸ்தாரமான நூலு கும் இ ொரு முகவுரைபோல் விள கி ருமெ ர றும் நினைத்து இதை இப்பொழுது எழுதி வெளியிட்டிரு கிறோம். இன்னும் கிலாபத் பிரச்னையானது மி மும்முரமா நடந்து ரும் இ ாலத்தில் அந்த "கிலாபத் தி ஆரம்ப ால ாழ் ை யானது எவ் ாறு இருந்து ந்த தெ றும் அ ாலத்திய மு லிம் குடியாசா து எவ் ாறு

நிலைநிறுத்தப்பட்டிருந்த தென்றும் தெரிந்து கொள்ளுதற்கும் இச்சிறு நூலானது பயன் படுமென்றும் எண்ணியிருக்கிறோம். ஆயினும் (ஆண்டவன் நாடுவானாயின்) குர்ஆன் ஷரீபின் மொழிபெயர்ப்பானது ஒருவாறு முடிவடைந்த பின்னர் "நாயகமான்மிய' மானது மிகவிரிவாக வெளியாகுமென்று எதிர் பார்த்திருக்கிறோம் (எல்லாவற்றிற்கும் அல்லாஹ் போதுமானவன்).

நபிகள் நாயகத்தின் சரித்திரத்தையும் அவர்களுக்குப் பின்னர் வந்த "குலபாயிராஷிதீன்' களுடைய சரித்திரங்களையும் அவர்களுடைய ராஜ்யபரிபாலன முறையையும் அக்காலத்திய தேசவள விவரங்களையும் தெரிந்து கொள்ள வேண்டுமாயின் அக்காலத்திய பூகோள சாஸ்திரமானது அவசியமாயிருப்பதைக் கண்டு இதனுடன் ஒரு தேசப் படமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதன் உதவியைக் கொண்டு இந்நூலிலுள்ள ஸ்தல விவரங்களை ஒருவாறு ஒவ்வொருவரும் நன்கு தெரிந்துகொள்ளலா மென்றெண்ணுகிறோம். இஃதொரு மிகச்சிறு நூலாதலின் இதில் இன்னமும் சேர்க்கப்பட வேண்டிய பல பெரிய விஷயங்கள் இருக்கலாம்; மற்றும்பல குறைகளும் இதில் காணப்படுதல் கூடும். ஆயினும் குற்றத்தை நீக்கிக் குணத்தை யேற்பதே பெரியாரின் செய்கையாகும். மற்றும் பல்லோர் இத்தகைய நூல்களை எழுத முன்வருதற்கும் இஃதொரு தூண்டுகோலா யிருக்குமென் றெதிர்பார்க்கிறோம்.

ஸெகண்டுலைன் பீச்,
சென்னை.

பா. தாவுத்ஷா
1 12 3

بَلَغَ الْعُلٰى بِكَمَالِهٖ ۞ كَشَفَ الدُّجٰى بِجَمَالِهٖ

حَسُنَتْ جَمِيْعُ خِصَالِهٖ ۞ صَلُّوْا عَلَيْهِ وَآلِهٖ

வமசவழிப்படி.



N. B. இதில்.........இம்மாதிரியான புள்ளியிட்ட கோடானது இடையில் சில தலை முறைகளின் பெயர் விடப்பட்டிரு கிற தென்பதை ட்டும்.

குர்ஆன் ஷரீபு

தமிழில வெளியாய் வருகிறது.

இதுவரை இம்மாதிரி கிரந்தம் பார்த்திருக்கமாட்டீர்கள்!

செந்தமிழில் குர்ஆனும் அதன் விரிவுரையும் வெளியாவது இதுதான் முதல்தடவை. முஸ்லிம்களுக்கும் அல்லாதாருக்கும் இஃதோர் அத்தியாவசியமான வேத புத்தகமாம். இதனை ஒப்பதும் மிக்கதும் வேறொன்றுமில்லை; இதைக் கையிலெடுத்தவருக்கே இப்பெருமை விளங்கும். விலை விவரங்களுக்கு எமக்கு எழுதிக்கொள்ளலாம். சில பிரதிகளே அச்சாகின்றன. சீக்கிரம் செலவழிந்துவிடும்; ஆதலின் முந்துங்கள்! முந்துங்கள்!!

இ. அப்துர் ரஹ்மான்

16-17, ஸக்கின்டு லேன் பீச்,

சென்னை.

بسم الله الرحمن الرحيم

نحمده و نصلي

நபிகள்

நாயகமும் நான்கு தோழர்களும்

அத்தியாயம்- 1.

அரபுநாடும் ஆதிகாலமும்

நமது நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ஜீவிய சரித்திரத்தின் உண்மையான சீரையும் சிறப்பையும் அறியப் புகுமுன் அவர்கள் இவ்வுலகில் அடைந்திருக்கும் வெற்றி இத்தன்மைத் தென்று தெரிந்துகொள்ள வேண்டுமாயின் அவர்கள் திருவவதாரம் செய்தநாடு அங்கு அவர்கள் காலத்துக்கு முன்னிருந்த மதக்கொள்கை, அரசநிலை ஒழுக்கு முதலியவற்றைப்பற்றி நாம் சிறிது தெரிந்து கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகும். பூர்வகாலமுதல் ஈஸவி 6-வது நூற்றாண்டு வரையிலுள்ள ஆயிரக்கணக்கான தலைமுறைக்காலம் ரையில் ஆசியாக்கண்டத்தின் தென் மேற்கு

மூலையில், மேற்கில் செங்கடலும் தெற்கில் இந்து மஹா சமுத்திரத்தாலும் கிழக்கில் பாரஸீகக் குடாக்கடல் ஓமான் குடாக்கடல் இவற்றாலும் சூழப்பட்டு வடக்கில் பாபிலோனியா ஸீரியா (ஷாம்) ஆகிய இந்நாடுகள் வரையில் அகன்றிருக்கும் தேசமாகிய அரபு நாடு* மட்டும், ஆசியாவின் மேல்பாகமும் ஆபிரிக்கா ஐரோப்பா கண்டங்களின் மத்திய பாகமும் பற்பலவிதமான மாறுதல்களை அடைந்து வரும் போதும் ஒரு சிறிதும் சலனமில்லாமல் ஒருதன்மைப் பட்டதா யிருந்து வந்தது. ராஜ்யங்களும் தேசங்களும் புதிது புதிதாகத் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. பழயராஜ பரம்பரைகள் ஒழிந்தும் புதிய பரம்பரைகள் தோன்றியும் வந்தன. தேசங்களின் எல்லைகளும் பெயர்களும் மாறிக் கொண்டிருந்தன. பற்பல தேசவாசிகள் அடியோடு அழிக்கப்பட்டும் அடிமைகளாக ஆக்கப்பட்டும் வந்தார்கள். இன்னும் அரபுநாட்டைச் சூழ்ந்துள்ள எல்லைப்புற நாடுகளில் எண்ணிறந்த மாறுதல்களெல்லாம் ஏற்பட்டுக்கொண்டிருந்த போதிலும் அரபுநாடுமட்டும் அசைவற்றிருந்தது. இந்நாட்டிலுள்ளாரோ அங்குமிங்கும் பிரயாணம் செய்து கொண்டு தங்களுடைய புருஷ கம்பீரமான தோள்களை அடிமையென்னும் நுகத்தடியின் கீழே தாழ்த்திக்கொள்ளாமல் பழயகாலப் பழக்க வழக்கங்களையே அனுஷ்டித்தவர்களாய்ச் சுயேச்சையோடு வாழ்ந்து வந்தார்கள். ஆனால் நம்முடைய நபிகள் நாயகமவர்கள் திருவவதாரம் செய்யும் போது அரபுநாட்டின் பெரும்பாகம் வேறு தேசமன்னரின் கீழ் அடங்கிக் கிடந்தது.

பிரான்ஸ் தேசத்தைப் போன்ற அவ்வளவு விஸ்தீரண

---

* இந்நாடானது தௌராத் முதலிய பழய வேதங்களில் பாரான் தேசமென்று வழங்கப்படுகிறது.

முள்ள இத்தேசமானது பூசாரத்திலும் சீதோஷ்ண நிலைமையிலும் ஜனத்தொகுதியின் தோற்றபேதத்திலும் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருக்கக்கூடிய பலமாகாணங்களாகப் பிரிந்துகிடக்கிறது. இபுரானியா பாஷையிலிருந்த தௌராத்து வேதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏதோமியர்களும் மிதியானியர்களும் பண்டைக்காலத்தில் ஜீவித்து வந்த மலைப்பிராந்தியமானது அரபுநாட்டின் வடபாகத்திலிருந்து வருகிறது; அதற்கப்பால் ஹிஜாஸ் என்னப்படும் தேசமானது அமைந்திருக்கிறது. புராதனகாலத்தில் யதுரிப் என்று வழங்கப்பட்டுவந்து பிறகு நம்முடைய நபிபெருமான் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் அங்கே சென்று குடியேறிய பின் மதீனமாநகரென்று வழங்கப்பட்டுவரும் அந்தப் பெயர்வாய்ந்த பட்டணமும், நபிகள் நாயகமவர்களின் திருவவதார ஸ்தலமாகிய மக்கமாநகரும், ஹஜ்ஜுக்குச் செல்லும் முஸ்லிம் யாத்திரீகர்கள் சென்றிறங்கும் துறைமுகமாகிய ஜித்தாவென்னும் பட்டினமும் இந்த ஹிஜாஸ் தேசத்தில்தான் அமைந்திருக்கின்றன. இந்த ஹிஜாஸ் தேசமானது ஸூயெஸ் சந்தியிலிருந்து இந்து மஹாசமுத்திரம் வரையில் பரவியிருக்கக்கூடிய மலைத்தொடருக்கும் செங்கடலுக்கும் இடையில் தெற்குவடக்கில் நீண்டிருக்கிறது. அரபுநாட்டின் தென்மேற்கு மூலையிலுள்ள தேசத்துக்குத்தான் எமன் தேசமென்று பெயர். ஹிஜாஸின் தென்பாகத்திற்குத் திஹாமா என்று பெயர் சொல்வர்; இதில் எமன் தேசத்தின் பகுதியும் சிறிது கலந்திருக்கிறது. எமன் தேசத்துக்குக் கிழக்கில் இந்துமஹா சமுத்திரக் கரையோரத்தில் அமைந்திருக்கும் பகுதிக்குத்தான் ஹழ்ரமௌத் என்று பேர்சொல்வது வழக்கம்; இதன் கிழக்கே நெடுந்தூரத்தில் உமான் குடாக்கடலோரத்தில்

உமான் என்னும் தேசம் அமைந்திருக்கிறது. ஹிஜாஸ் மலைத்தொடரிலிருந்து கிழக்கே பாரஸீக குடாக்கடலிலிருக்கும் அல் அஹ்ஸா, அல்பஹ்றைன் ஆகிய இடங்களுக்குச் சமீபத்திலுள்ள பாலைவனம்வரையில் அகன்றிருக்கும் மேட்டு நிலத்துக்கு நஜ்த் என்று பெயர் சொல்லப்படுகிறது. இந்த நஜ்தென்னும் பிராந்தியத்தில் மலைகளும் குகைகளும் மணல் வெளிகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன. இன்னும் குளிர்ச்சியான சோலைகளடர்ந்த நீர்த்துறைகளும் அடிக்கடி காணப்படுவதுண்டு. இப்படிப்பட்ட இடங்கள்தாம் அந்தப் பாலைவனத்தில் அலைந்துதிரியும் வனவாசிகளுக்கொரு பத்திரமான ஸ்தலமாயிருக்கின்றன. ஐரோப்பா யுத்தத்துக்கு முன்வரையில் ஹிஜாஸ்தேசமும் எமன் தேசமும் துருக்கியின் ஆட்சியின் கீழ் அமைந்திருந்தன. நஜ்த் பிராந்தியமானது ஒருதனியரசால் ஆளப்பட்டு வருகிறது. ஆனால் உமான் தேசமானது முஸ்கட் தேசத்தின் சுல்தானுடைய ஆளுகையிலிருக்கிறது.

இந்தப் பெரிய தேசமாகிய அரபு நாட்டில் பெரிதான நதியொன்றுமில்லை. அங்கங்கே காணப்படும் சிறு சிறு சிற்றாறுகள்தாம் இத் தேசத்துக்குச் சிறிது பசுமையைக் கொடுக்கின்றன. அங்கே மழையென்பது மகா அபூர்வமாயிருக்கும்; அத்தேசத்திலுள்ள ஆகாயமானது எப்பொழுதும் உலர்ந்து வறட்சியாகவே யிருக்கும். ஆனால் போதுமான ஜல வசதியுள்ள சிற் சில இடங்களில் மட்டும் சுகாதாரமானது சிறிது சௌகரியமுள்ளதாய்க் காணப்படும். ஆயினும் நீர் வளமுள்ள இடங்களில் மட்டும் நில வளமும் அதிகமாகவே காணப்படுகின்றது. எமன் தேசத்திலுள்ள ஜிபாலுல் எமன் என்றழைக்கப்படுகின்ற மேட்டு நிலமானது

அதிக உயரமாயிருக்கிறது. அதில் மிக விசாலமான நீர் வளம் பொருந்திய பள்ளத்தாக்குக்களும் அனேகமாயுண்டு.

செங்கடலிலிருந்து ஐம்பது மைல் தூரத்திலும் ஜபல் குராவின் கருங்கற் பாறைகளிலிருந்து முப்பது மைல் தூரத்திலும் மக்கமா நகரைச் சூழ்ந்துள்ள ஹிஜாஸின் பகுதியானது சமபூமியாயில்லாமல் கரடுமுரடான கற்பாறையாயிருக்கிறது. சூரிய வெப்ப முழுமையும் மகா கொடுமையுடன் பிரதிபிம்பித்துக் காட்டக்கூடிய வெறுங் கருங்கற் பாறைகளும், ஆடுமாடுகளுக்குப் போதுமான பசும் புற்களையும் விளைவித்துக் கொடுக்காத பாலைவனங்களாகிய பள்ளத் தாக்குக்களும், எப்பொழுதும் உலர்ந்து கிடக்கும் ஓடைகளும் இப்பூபாகத்தில் மிகுந்திருக்கின்றன. இப்படிப்பட்ட விதமாய் உலர்ந்து வெப்பமடைந்திருக்கும் வறண்ட பூமிக்குக் கிழக்கே சிறிது தூரத்தில் பசும் புல் நிறைந்து பழ மரங்களாலும் பல விருக்ஷங்களாலும் அலங்கரிக்கப்பட்டுப் பற்பல விதமான சாக பதார்த்தங்களையும் இலந்தை அத்தி திராக்ஷை மாதுளை வாதுமை முதலிய பழ வர்க்கங்களையும் விளைவிக்கக் கூடிய ஒரு குளிர்ந்த பாகமுண்டு. இதற்குப் பெயர் தாயிபு என்று கூறுவர்.

இப்படிப்பட்ட அரபுநாட்டில் பல்வேறு காலங்களில் பல்வேறுவிதமான ஜனங்கள் வசித்து வந்திருக்கிறார்கள். அரபிகள் தங்களுடைய பூர்வீக பரம்பரையானது அனேகமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்து தொடர்ந்து வருவதாகப் பெருமை பாராட்டிக் கொள்ளுகிறார்கள். பூர்வ காலத்தில் உண்டான மகா வெள்ளத்துக்குப்பின் நூஹ் அலை ஹிஸ்ஸலாம் அவர்களின் புத்திரரான ஷாம் அலை ஹிஸ்ஸலாம் அவர்களுடைய பரம்பரையினின்றும் அரபிகளின் முக்கிய வர்க்கங்களாகிய ஆதின் வம்சத்தார்களும்

தமூதின் வம்சத்தார்களும் தோன்றினார்களென்று கர்ண பரம்பரையான சரித்திரமானது இன்றைக்கும் வழங்கி வருகின்றது. இந்தப் பூர்வ வர்க்கத்தாரெல்லோரும் தங்களுடைய பாபமிகுதியால் பழய காலத்தில் அழிக்கப்பட்டுப் போயினர்; குர் ஆன் ஷரீபில் இவ்விஷயம் விளக்கமாகக் காணப்படுகின்றது. இவர்களைக் கீழ் நாட்டுச் சரித்திரங்களில் "புராதன அரபிகள்" என்று வழங்கி வருகிறார்கள்.

இன்னும் பண்டைக் காலத்தில் ஜீவித்திருந்த ஷால்டியர்களைப் போன்ற அதே வர்க்கத்தைச் சார்ந்த ஒரு வகை ஜாதியாரும் இந்த அரபு நாட்டில் ஆதிகாலத்தில் குடியிருந்து வந்தார்களென்று தேச சரித்திர நூலாசிரியர்கள் கூறுகின்றனர். அவர்கள் அந்தேசத்தில் அதிகமான நாகரிகத்தை அடைந்திருந்தார்கள்; அவர்களுடைய நாகரிகத்தின் சின்னங்கள் இன்னும் அரபு தேசத்தின் தென்பாகத்தில் காணப்படுகின்றன. அவர்களுடைய நாகரிகமும் நல்லரசும் அக்காலத்தில் மெஸபொட்டேமியா எகிப்து முதலிய நாடுகள் வரையில் பரவியிருந்ததென்று பலர் அபிப்பிராயப் படுகின்றனர். அவர்கள் அக்காலத்தில் அதிக பிரம்மாண்டமான ஆலயங்களையும் மாளிகைகளையும் நிர்மாணித்திருந்தார்கள். அதன் என்னும் கடற்றுறைப்பட்டினத்துக் கருகிலுள்ள அழகிய குளங்களெல்லாம் அவர்களாலேயே வெட்டப்பட்டிருக்க வேண்டுமென்று சரித்திர நூலாசிரியர்கள் அபிப்பிராயப் படுகின்றனர்.

புராத்து நதிக்கரைக்குக் கிழக்கேயுள்ள ஏதோவொரு தேசத்திலிருந்து புறப்பட்டு வந்து அரபுதேசத்திலுள்ள எமன் ஹல்ரமௌத் முதலிய பகுதிகளில் வந்து குடியேறிய ஒரு ஜாதியாரால் அங்கிருந்த புராதனக் குடிகள் அடியோடு அழிக்கப்பட்டார்கள். இவர்கள் ஜக்தான் என்று

மறுபெயர் வழங்கப்பட்ட கஹ்தான் என்னும் பெயரையுடைய மனிதமூலத்திலிருந்து உற்பத்தி யானவர்களென்பது பெரும்பான்மையோரின் அபிப்பிராயம். அந்தக் கஹ்தானுடைய குமாரர்களுள் ஒருவர் யரப் என்னும் பெயரால் வழங்கப்பட்டு வந்தாரென்றும், அவருடைய பெயராலேயே இன்றைக்கும் அத்தேசமானது அரபு நாடென்று வழங்கப்பட்டு வருகிறதென்றும் சரித ஆசிரியர்களுள் மிகுதம்பேர் கூறிவருகின்றனர். யரப் என்பவரின் குமாரர் அப்துஷ்ஷம்ஸ் என்று அழைக்கப்பட்டு வந்தார்; அவருக்கோர் அருமையான மறுபெயர் ஸபா என்று வழங்கப்பட்டு வந்தது. ஆதலின் அந்தவம்சத்தில் அரசுபுரிந்து வந்த மன்னர்களுக்கு ஸாபிய மன்னர்களென்று பெயர் சொல்வது வழக்கம். அம்மன்னர்களெல்லாம் அதிகமான ஜயசீலர்களாகவும் பெரும்பெரும் பட்டணங்களை யெல்லாம் நிர்மாணிக்கக் கூடிய சக்திவாய்ந்தவர்களாகவும் பெரும்புகழ் பெற்றிருந்தனர். எமன் தேசத்திலும் அரபுநாட்டின் ஏனைப்பகுதிகளிலும் பரவியிருந்த அவர்களுடைய ராஜ்யமானது நம்முடைய நபிகள் நாயகமவர்களின் திருவவதாரத்துக்குப் பின்னும் ஒரு நூற்றாண்டு வரையில் நின்று நிலவி வந்தது.

இந்த ஸாபியர்களுக்குப் பின்னர் அந்த அரபு நாட்டில்வந்து குடியேறிய ஜாதியாருக்கு இஸ்மாயீலின் கூட்டத்தார்களென்று பெயர் கூறுவர். நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய முதற்குமாரராகிய நபி இஸ்மாயீல் (அலை) அவர்களுடைய வம்சத்தாருக்கு இப்பெயர் சொல்வது வழக்கம். நபி இஸ்மாயீல் (அலை) அவர்கள் தங்களுடைய அருமைப் பிதாவினால் கொண்டுவந்து ஹிஜாஸில் குடிநிறுத்தப் பட்டார்கள். இவர்களுடைய சந்ததியார்களால்தான் அரபு தேசத்தின் பெயரானது இவ்வுலகத்தவ

ரின் கவனத்தை யெல்லாம் இழுக்கும்படியான அவ்வளவு புகழ் பெற்றதாகச் செய்யப்பட்டு விட்டது. நபி இப்ராஹீம் (அலை) அவர்களும் நபி இஸ்மாயீல் (அலை) அவர்களும் அரபு நாட்டுக்குள் வந்து குடியேறியபோது அதற்கு முன் அங்கே நிலைத்திருந்த கஅபா என்னும் ஆலயத்தை அவர்கள் பழுது பார்க்க வேண்டுமென்று ஆண்டவனுடைய கட்டளை யானது பிறந்ததாக நமது குர்ஆன் ஷரீபு வேதமானது கூறு கின்றது. குர்ஆன் ஷரீபு முழுதும் ஆழ்ந்து நோக்கும் போது கஅபத்துல்லாவானது நபி இபராஹீம் (அலை) அவர் களுக்கு நெடுங்கால முன்னமே அந்த மக்கமாநகரில் அமைக் கப்பட்டிருந்த தென்னும் விஷயம் வெளியாகின்றது. நபி இப்ராஹீம் (அலை) அவர்களாலாவது அல்லது நபி இஸ்மா யீல் (அலை) அவர்களாலாவது கஅபத்துல்லாவானது முதன் முதலில் க[illegible]ப்பட்டதென்று சிலர் கூறும் கூற்று னது ஆதாரமற்றதா யிருக்கிறது. ஆதிகாலமுதல் விருந்த கஅபாவை அந்த இப்ராஹீம் நபி (அலை) அவர்கள் பழுது பார்த்ததாகவே எமது திருமறை விளக்கி யிரு[illegible]கிறது. இவ்வாலயத்தைப் பண்டைக்கால முதலே அரபிகள் ஒரு புண்ணிய க்ஷேத்திரமாகக் கருதியிருந்தார்கள்; இப்பொழு தும் இந்தக் கஅபாவானது முஸ்லிம்களுக் கெல்லாம் ஒரு முக்கியமான மத்திய யாத்திரைஸ்தலமாயிருந்து வருகிறது. இதில் தான் முஸ்லிம்களின் ஒற்றுமையானது நன்கு பிரதிப லிக்கிறது. இவ்வாலயம்தான் முஸ்லிம் கலீபாவின் பாது காப்பிலிருக்கவேண்டுமென்று கிலாபத்வாதிகள் வாதித்து வருகின்றனர்.

அரபு நாட்டிலுள்ள மனிதர்கள் எக்காலத்திலும் இரு பெரும் பிரிவினையை உடையவர்களாகவே இருந்து வந்திருக் கிறார்கள். நகர[illegible]களில் வீடுகளை[illegible] கட்டி[illegible]கொ[illegible]டு வசிக்கும்

நகரவாசிகள் ஒருவகையாராவார். நகரங்களில் வசிப்போர் நேர்த்தியான வீளை நிலங்களை வைத்துக்கொண்டு அங்கங்கே வசதியான வீடுகளைக் கட்டிக்கொண்டு ஜீவித்துவருவார்கள்; அவர்கள் வீட்டைச் சுற்றித் திராக்ஷைத் தோட்டங்களும் பூம்பொழில்களும் பேரீச்சந் தோப்புக்களும் நல்ல நிலங்களும் நிறைந்திருக்கும்; அவர்கள் ஆடுமாடு ஒட்டகங்களை மேய்த்துக்கொண்டு உழுதொழில் செய்து வருவார்கள்.

இவ்வர்க்கத்தைச் சேர்ந்த மற்றவர்கள் செங்கடல் துறைமுகப் பட்டினங்களில் வியாபாரம் செய்து வருவார்கள். அரபு நாட்டின் தெற்கிலுள்ள பாரஸீகக் குடாக்கடலோரத்திலும் கப்பல் வியாபாரிகள் வசிப்பார்கள். எமன் தேசத்திலுள்ள அரபிகளெல்லாரும் வாணிபர்களே. இங்கே வாசனைப் பண்டங்கள் மிகுதியாக விற்பனை செய்யப்படும். புலவர்கள் இப்பாகத்தை "ஸபிய்யா என்று அழைப்பார்கள். இந்நாட்டு வியாபாரிகளுள் இவர்கள்தாம் மிக்க ஊக்கமுடையவர்கள். இந்தியா ஆபிரிக்கா முதலிய இடங்களிலிருந்து தங்கம் வாசனைப் பண்டம் முதலிய விலையுயர்ந்த சாமான்களும், ஆபிரிக்காவிலுள்ள பார்பாரா தேசத்திலிருந்து கஸ்தூரியும் அரபு நாட்டுக்குக் கப்பல் மார்க்கமாய் வந்து சேரும்; இப்பண்டங்களெல்லாம் ஒட்டகத்தில் பொதியாக ஏற்றி உள் நாடுகளுக்கு அனுப்பப்படும். மத்திய தரைக்கடலின் வழியாக மேல் நாடுகளுக்கும் இவை ஏற்றுமதி செய்யப்படும். இந்த வாணிபர்களுக்கு வேண்டிய எண்ணிறந்த ஒட்டகங்கள் கூடாரத்தில் வசித்துக்கொண்டு ஊரூராகத் திரியும் அரபிகளிடத்தில் கிடைக்கும். தங்களுடைய நிரந்தர வாசத்தாலும் வாணிபத்தின் அமைதியாலும் இவர்கள் தங்களுடைய உண்மையான இயற்கையை மறந்து விட்டார்கள். இக்காரணத்தால்தான்

எமன் தேசத்தை அயல்நாட்டார் அடிக்கடி கைப்பற்றிக் கொண்டிருந்தார்கள். பகைவரை வெல்வது இவர்களால் முடியாமற் போயிற்று.

பாலைவனங்களில் கூடாரங்களில் வசித்துக்கொண்டு ஊர் ஊராய் அலைந்து திரியும் வனவாசிகளாகிய பத்துக்களென்னப்படுபவர் மற்றொருவகையாராவர். இந்த வனவாசிகள் தங்களுடைய குடும்பத்துடனும் ஆடு மாடு ஒட்டகம் முதலிய கால் நடைகளுடனும் எப்பொழுதும் கூடாரங்களிலேயே வசித்துக் கொண்டு மணல் வெளிகளிலும் பசும் புற்றரைகளிலும் திரிந்து கொண்டிருப்பார்கள்.

இவர்களுள் அனேகம் உட்பிரிவுகளுண்டு. ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு ஷெய்கு அல்லது அமீர் என்பவர் தலைவர். இவர் தம் கூடாரத்துக் கெதிரில் வேலாயுதத்தை நட்டு வைத்தால் அதற்கு மற்றவர்கள் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். இந்தத் தலைமைப்பட்டம் ஒரேவம்சத்தில் பரம்பரையாகத் தொடர்ந்துவரும். ஆனால் மற்றவர்கள் விருப்பம் கொண்டால் வேறொரு வம்சத்தவரைத் தலைவராக நியமித்துக் கொள்ளலாம். அமீருடைய நடத்தை மற்றவர்களுக்கு உசிதமாக இராவிடின் அவர் உடனே விலக்கப் படுவார். யுத்தம் தொடங்குவதற்கும் சமாதானம் செய்வதற்கும் அவருக்கு அதிகாரமுண்டு. ஓரிடம் விட்டு இன்னவிடம் புறப்பட வேண்டுமென்பதும் அன்னியரை ஆதரிக்க வேண்டியதும் இவராலேயே செய்யப்பட வேண்டும். ஆயினும் மற்றவர்களுடைய விருப்பத்தின் படியே அவர் நடக்க வேண்டும். இவ்வாறு அனேகம் பிரிவுகளிருந்த போதிலும் ஒவ்வொருவரும் தமக்கும் மற்றவருக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை நன்குணர்ந்திருந்தார். வெவ்வேறு பிரிவுகளின் அமீர்களெல்லாரும் ஒன்று சேர்ந்து

தமக்குள் ஒருவரைத் "தலைவருள் தலைவராக ஏற்படுத்திக் கொண்டு அவருக்குக் கீழ்ப்படிந்து எல்லோரும் நடப்பார்கள். ஒவ்வொரு பிரிவிலுள்ளாரும் அத்தேசத்தின் வெவ்வேறிடங்களில் அலைந்துதிரிந்தாலும் இந்தப்பெருந்தலைவர் உத்தரவு செய்தால் எல்லோரும் ஓரிடத்திற் கூட வேண்டும்.

ஆயினும் இத்தனை வர்க்கத்தாரையும் அடக்கி யாளுதற்குரிய ராஜ்யாதிகாரம் ஒருவருக்கும் இல்லாமையால் ஒருவருக்கொருவர் சதா சண்டை விளைந்துகொண்டே யிருக்கும். அவர்களுக்குள் பழிக்குப்பழிவாங்கும் வழக்கம் ஒருவேதக் கட்டளையா யிருந்து வந்தது. ஒருவன் கொல்லப்பட்டால் அவனுடைய உறவினர் அதற்கு ஈடாகப் பழி வாங்கவேண்டும். இதனால் பெருங்கலகங்களும் கொலைகளும் நேர்வதுண்டு; இக்காரணத்தால் அனேகந்தலைமுறை வரையில் சண்டை மூண்டு கொண்டே யிருக்கும். கொலையுண்டவனுக்காகப் பழிவாங்காவிடின் அவனுடைய கபாலம் வெடித்து அங்கிருந்து ஒருசிறகுள்ள பூச்சி வெளிப்பட்டு ஆகாயத்தில் கிளம்பி, "எனக்குத் தாகசாந்தி செய்யுங்கள்; தாகசாந்தி செய்யுங்கள்," என்று கத்துவதாக அவர்கள் நம்பி யிருந்தார்கள். அவனைக் கொன்றதற்காகக் கொலை செய்தவனுடைய இரத்தத்தைக் குடித்தால் மட்டுமே அவ்வுயிர் சாந்தியடைவதாக நினைத்துவந்தார்கள்.

இவர்கள் தங்களுடைய ஒட்டகங்களையும் குதிரைகளையும் கள்ளர்களினின்றும் காப்பற்ற வேண்டியது அவசியமாதலால் இவர்களுக்கு ஆயுதப்பழக்கம் நன்றாகத் தெரியும். வில் வாள் வேல் ஆகிய ஆயுதப்பிரயோகங்களில் இவரை ஒப்பாரும் மிக்காரும் அக்காலத்தில் ஒருவருமில்லை. குதிரைகளைப் பழக்குவதில் இவர்கள் மிக்க புகழ்பெற்றவர்கள் யுத்தப்பழக்கமும் இவர்களுக்குத் தெரியும். ஆனால் இ ர

கள் கொடிய துன்மார்க்கர்கள்; காதல் களவாடல் கள்ளுண்ணல் முதலிய துன்மார்க்க மனைத்தும் அவர்கள்பால் ஒருங்கே காணப்படும். பாடத்தகாத பாடல்களையெல்லாம் பகிரங்கமாகப் பாடிப் பரமானந்தம் அடைவார்கள். கொலையும் களவும் அவர்களுடைய இயற்கைத் தொழில்; வியவசாயமும் வியாபாரமும் இழிதொழிலென்று கருதுவார்கள். இத்தகைய இழிதொழில் செய்வோரைக் கொள்ளை யடிப்பதாலும் கொலை செய்வதாலும் ஒன்றும் தீங்கில்லை யென்றும் சமாதானம் செய்து கொள்ளுவார்கள்.

இந்த அரபிகளுடைய தோற்றமோ மெலிந்து காணப்படும். ஆனால் தேகதிடம் வாய்ந்து சுறுசுறுப் புள்ளவர்களாயிருப்பார்கள்; அளவற்ற துன்பத்தையும் வுயர்ச்சியையும் சகிக்கக்கூடியவர்கள்; அவர்களுடைய நிறம் பழுப்புக்கலந்த வெண்மையாயிருக்கும். ஆகாரம் மிதமாகச் செய்வார்கள்; பேரீச்சம்பழங்களையே பெரும் பாலும் புசித்து ஜீவிப்பார்கள்; அவர்களுடைய தேகத்தைப்போல் மனமும் உறுதி வாய்ந்ததா யிருக்கும். விஷயங்களை எளிதில் அறிந்து கொள்ளும் சக்தியும் கூரிய நுண்ணறிவும் சிறந்த கற்பனைசக்தியும் பெற்றிருப்பார்கள். தங்களுடைய குலத்தைப் பற்றி மிக்கபெருமை பாராட்டிக் கொள்ளுவார்கள். சிறந்த புலவர்கள் எழுதிய காவியங்களைக்கேட்டால் மனமுருகி மெய்ப் பாடுறுவார்கள். வேறுபாஷைகளைக் காட்டிலும் அரபுபாஷைக் குள்ள பலவகை மேன்மையால் அவர்களெல்லோரும் இனிமையாகப் பேசுந்திறம் பெற்றிருந்தார்கள். பெரு 'காப்பிய'ங்களைப் படிப்பதைக் காட்டிலும் சிறுநூல்களிலேயே அவர்களுக்கு விருப்பம் அதிகமாயிருக்கும். அவர்களுடைய பேச்சில் உபாக்கியானங்களும் உபகதைகளும் மிகுந்திருக்கும்.

அவர்கள் கொடுமைவாய்ந்த போர்வீரர்களா யிருந்த போதிலும் பெருந்தன்மையும் விருந்தினரை உபசரிக்கும் குணமும் அவர்மாட்டு மிகுந்திருந்தன; தர்மம் செய்வதில் மகிழ்ச்சி யுடை யவர்கள்; வழிப்போக்கர் யாரும் அவர்கள் வீட்டுக்குள் தடை யின்றி நுழையலாம். ஜன்மவிரோதிக ளாயினும் ஒருமுறை சேர்ந்து விருந்துண்டு விடுவார்களா யின் பிறகு எப்பொழுதும் அவர்களுக்குள் மனவருத்த முண்டாகாது.

யுத்தத்தில் பிடிபட்ட பெண்கள் வெற்றியடைந்தவ ரின்கீழ் அடிமைத் தொழில் புரியவேண்டும் ; எஜமான்கள் விரும்பினால் இப்பெண்கள் பாடல்பாடி நாட்டியம் செய்ய வேண்டும் ; சொந்தக்காரர் தங்கள் பெண்களைச் சிறை மீட்டுக்கொள்ள விரும்பினால் வெற்றி பெற்றவரால் குறிக்க ப்பட்ட ஈடுகாட்டிப்பணத்தைக் கொடுத்து மீட்டுக்கொண்டு போகவேண்டும்; இந்தப்பணம் வெற்றி பெற்றவரைச் சேரும்.

அத்தேசத்தின் ராஜ்ய விஷயத்தைக் கவனிக்குங்கால் அரபு நாட்டின் வட பாகமும் மத்திய பாகமும் எக்காலத் திலும் அன்னிய ஆட்சியாரின் கீழ் அமைந்திருந்ததாகத் தெரியவில்லை; ஆனால் எமன் தேசத்தில் மட்டும் அபிஸனி யர்கள் (ஹபஷிகள்) சிறிதுகாலம் ராஜ்ய பரிபாலனம் புரிந்து வந்தார்கள். அவர்களும் கொஞ்ச காலத்துக்கெல்லாம் ஓர் அரபு அரசரால் பாரஸீக மன்னர்களின் துணையைக் கொண்டு துரத்தப்பட்டார்கள். அந்த நாளிலிருந்து மீண்டும் ஒரு நூற்றாண்டு வரையில் எமன் தேசமானது பாரஸீக தேசத்தின் ராஜப் பிரதிநிதியின் கீழ் அமர்ந்திருந்தது.

அக்காலத்தில் அரபு தேசத்தில் மிகுதமான யூதர்க ளும் சிற்சில கிரிஸ்தவர்களும் வசித்து வந்தார்கள். அவர்

ள் தங்கள் தங்களுடைய மதத்தையே பின்பற்றிவந்தார் ள். ஆனால் அரபிகளுள் பெரும்பான்மையோர் விக்கிரஹங்களையும் வானத்திலுள்ள நட்சத்திரங்களையும் வணங்குகிறவர்களா யிருந்தார் ள். ஒவ்வொரு நகரத்துக்கும் வெவ்வேறான் ஆண் சாமியும் பெண் சாமியும் இருந்து வந்தன. ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான ஆராதனையும் நியமிக்கப் பட்டிருந்தது. இவ்வாறே ஒவ்வொரு கோத்திரத்தாருக்கும் தனித்தனியான தெய்வமும் தனித்தனியான கோயிலும் பூஜையும் காணப்பட்டன. அந்த அரபு தேசத்து மனிதர்களுடைய எல்லாக் கோத்திரத்தாருக்கும் பொதுவான மத்தியபாகமென்று கருதப்பட்டு வந்த மக்கமா நகரிலுள்ள கஅபாவில் மட்டும் முந்நூற்றறுபது விக்கிரஹங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. தினமொன்றுக்கு ஒரு விக்கிரஹம் விகிதம் வருஷமொன்றுக்கு 360 தினத்துக்கும் 360 விக்கிரஹங்களைப் பூஜித்து வந்தார்கள். அந்தத் தெய்வங்களுக்கு ஆண் நரபலியும் அடிக்கடி யிடுவார்கள். இன்னும் அவர்களுடைய குணவிசேஷமானது மகா அருவருப்புள்ளதாயிருந்தது. ஒவ்வொரு மனிதனும் நூற்றுக் கணக்கா மனைவிகளை விவாஹம் செய்து கொள்வான். பலதாரமும் அவர்களுக்குள் இயற்கையான முக்கமா இருந்து வந்தது; ஒருதாரமணம் செய்வதை ஓர் இழி தொழிலாக எண்ணியிருந்தார்கள். இஃதல்லாமல் வியபசாரமும் மதுபானப் பழக்கமும் கரைகடந்து வழங்கின. ஓர் அரபியினுடைய மகன் தன் தகப்பனுடைய மறு தாரங்களை யெல்லாம் தனுடைய மனைவிகளாகவே பாவித்து அவர்களைப் பெண்டாளத் துணிந்து விடுவான். இன்னும் கொலையும் களவும் கொள்ளையும் அவர்களுக்கு நித்தியப் பழக்கமாயிருந்து வந்தன. அவர்களுக்குப் பெண் குழந்தை பிறக்குமாயின் சிலர்

அதை உயிருடன் மண்ணில் புதைத்து விடுவார்கள். அவர்களுடைய கொடூரமான குணங்களுள் அதிக பயங்கரமானது அவர்கள் தங்கள் பெண் குழந்தைகளை உயிரோடு சவக்குழியில் புதைப்பதுதான். அக் குழந்தை ஜீவித்திருந்தால் பிறருடைய விபசாரத்துக்கு ஆளாய் விடக்கூடுமென்னும் அச்சத்தினால் இப்படிப் புதைத்து வந்தார்கள். அவர்கள் பொதுவாகப் பெண்களை மிக்க இழிவுடன் நடத்தி வந்தார்கள். பெண்களுள் அனேகர் வித்வான்களாகவும் யுத்தவீரர்களாகவும் இருந்துவந்த போதிலும் அவர்கள் மகா இழிவாகக் கருதப்பட்டு வந்தார்கள். அவர்களுடைய விவாகம் மிக எளிதாக நடத்தப்பட்டு வந்தது; புருஷர்களுடைய கோபத்துக்குத் தக்கவாறு அவ்விவாக பந்தமும் அதி எளிதில் முறிக்கப்பட்டு வந்தது. இன்னும் அவர்களுடைய அருவருப்புள்ள பாமரத்தன்மையை ஏட்டில் எழுதுவோமென்றால் ஈண்டு இடம் போதாதென்று அஞ்சி இம்மட்டோடு நிறுத்திக்கொண்டோம்.

அத்தியாயம் 2.

நபி அவதாரமும இஸ்லாமிய போதமும்

"அல்லாஹுத் தஆலாவின் மீதும் இறுதித் தீர்ப்பு நாளின் மீதும் நம்பிக்கைவைத்து அல்லாஹ்வை அதிகம் ஞாபகத்தில் வைப்பவனுக்கு வேண்டிய முன் மாதிரியாகிய நமூனாவானது அல்லாஹ்வின் திருத்தூதரிடத்திலேயேயிருப்பதாக நீங்கள் நிச்சயமாகக் கண்டுகொள்வீர்கள்" (குர்ஆன், 33:21).

அரபு நாட்டின் ஆதிகால சரித்திரங்களை யெல்லாம் நாம் குர்ஆன் ஷரீபிலிருந்தே மிகுதம் தெரிந்து கொள்ளலாம்; அதில் ஆதிகால முதல் நடைபெற்று வந்த சரித்திரக் குறிப்பெல்லாம் காட்டப்பட்டிருக்கின்றன. மேலும் அரபிகளுடைய ஞாபகசக்தியானது மிகச் சிறந்ததாயிருந்ததனால் அவர்கள் தங்களுடைய புராதன சரித்திரங்களை யெல்லாம் கர்ண பரம்பரையான கதைகளிலேயே அமைத்து வைத்திருந்தார்கள். ஆனால் நம் நபிகள் நாயகம் அவர்களுடைய திருவவதாரத்திற்குப் பின் இருநூறு வருஷங்கள் சென்ற பிறகு அந்நாட்டுச் சரித ஆசிரியர்கள் தங்களுடைய பூர்விக சரித்திரங்களை யெல்லாம் அதி ஜாக்ரதையுடன் சேகரம் செய்து கிரந்த ரூபமாக வெளியிட்டிருக்கின்றனர். எமன் தேசத்தின் சில பகுதிகளிலிருந்து கண்டெடுக்கப்பட்ட சிலாஸாஸனங்களில் எழுதப்பட்டிருக்கும் விஷயத்தை ஊன்றி வாசித்துப் பார்க்குங்கால் அவற்றிலுள்ள சரித்திரங்களும் குர்ஆன் ஷரீபிலுள்ள சரித்திரங்களையும் கர்ண பரம்பரையான கதைகளையும் முழுதும் ஒத்திருக்கின்றன.

அரபு நாட்டிலிருந்த எல்லா மாகாணங்களின் மனிதர்களைப் பற்றியும் நாம் அதிகம் தெரிந்து கொள்ளவேண்டுதில்லை. மத்தியகாலங்களில் இவ்வுலகத்தில் பெரும் புகழ் பெற்ற ஹிஜாஸின் அரபிகளையும் எமன் தேசத்து அரபிகளையும் பற்றி மட்டுமே நாம் ஈண்டுத் தெரிந்து கொள்ளுவோம். ஹிஜாஸ் தேசத்து அரபிகளுள் முக்கியமான கூட்டத்தாருக்குக் குறைஷ் குலத்தார் என்று பெயர்சொல்வர். இக்குலத்தாரின் மூல பிதா பிஹ்ர்* என்று சரித ஆசிரியர்

*பிஹ்ரின் குமாரர் காலிப். காலிபின் குமாரர் லுவ்வை. லுவ்வையின் குமாரர் கஅப். கஅபின் குமாரர் முர்ரா. முர்ராவின் குமா

ள் கண்டுபிடித் திருக்கிறார்கள். பிஹ்ருடைய தந்தை இன்னாரென்று யாம் கண்டுத்தெரிந்துகொள்ள வேண்டுவ தில்லை இந்த பிஹ்ர் என்பவருக்குக் குரைஷ் என்று மற் றொரு சிறப்புப் பெயர் வழங்கப்பட்டு வந்தது. "குரைஷ்" என்னும் பதத்தின் தாத்பரியம் புராதன அரபு பாஷையில் ர்த்தகர் என்று பொருள் பட்டுவந்தது. இந்தக் †குரைஷ் என்னும் வியாபாரி வாழ்ந்துவந்த காலம் கிறிஸ்துவுக்குப் பிறகு மூன்றாவது நூற்றாண்டா யிருந்தது. இவருடை ய முன்னோர்களின் வம்ச பரம்பரை முழுதும் ஒழுங்கா த் தெரியாமற் போயினும் ஆதிகாலத்திலிருந்த நபி இஸ்மா யீல் (அலை) அவர்களுடைய வம்சத்தில் வந்த அத்னான் என்பவருடைய குமாரராகிய மஆத் என்பவரின் கோத்தி ரத்தில் பிறந்தவ ரென்பது மட்டும் அத்தேச சரித்திரத் தால் நன்கு விளங்குகின்றது. ஹிஜாஸிலுள்ள குரைஷ் குலத்தார்கள் மட்டும் தங்களுடைய குலப் பெருமையைப் பற்றியும் கோத்திர உயர்வைப் பற்றியும் மிகுதம் பெரு மை பாராட்டி வந்தார்கள். மற்றெல்லாக் கோத்திரத்தா ரைக் காட்டிலும் குரைஷ் குலத்தார் உண்மையில் மிகச் சிறந்தவர்களே. பெருமையிலும் பரிசுத்தத்திலும் இவர் களை மிக்காரும் ஒப்பாரும் யாருமில்லை.

ரர் கிலாப். கிலாபின் குமாரர் குஸ்ஸை. குஸ்ஸையின் குமாரர் அப்துத்தார். அப்துத்தாரின் சகோதரர் அப்துமனாபு. அப்து மனாபின் குமாரர் அப்துஷ்ஷம்ஸ். அப்துஷ்ஷம்ஸின் சகோதரர் ஹாஷிம். ஹாஷிமின் குமாரர் அப்துல் முத்தலிப். அப்துல் முத்தலிபின் குமாரர் அப்துல்லா. அப்துல்லாவின் குமாரர்தாம் நமது நபீகரீம் முஹம்மது முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களாவார்கள்.

†கரஷ் என்னும் தாதுவுக்கு வியாபாரம் செய்தல் என்பது தாத்பரியம்.

கி-பி. நான்காவது நூற்றாண்டின் இறுதியில் பிஹ்ரின் வம்சத்தில் வந்த குஸ்ஸை* என்பவர் மக்கத்தின் தலைவரா யிருந்து சிறுகச்சிறுக ஹிஜாஸ் முழுமைக்கும் அரசராக ஆய்விட்டார். அவருடைய காலத்துக்குமுன் வரையில் மக்காவானது ஒரு சிறு பட்டிக்காடா யிருந்தது. அங்கே சில குடிசைகளும் கூடாரங்களுமே காணப்பட்டன. இத் தக் குஸ்ஸை என்பவர் கஅபாவைப் பழுது பார்த்து அத னருகில் தனக்காக ஒரு மாளிகையையும் அமைத்துக் கொண்டார். அம்மாளிகையிலுள்ள ஒரு முக்கிய ஹாலானது ஊரார்கள் கூடிப் பேசுவதற்குரிய 'தாருன் நத்வா என்' னும் ஆலோசனை மண்டபமாக உபயோகிக்கப்பட்டு வந் தது. அதில் பொது ஜனங்களுடைய பொதுக் காரிய மெல்லாம் ஆலோசிக்கப்பட்டுவந்தன. இவர் குறைஷ் குல த்து மனிதர்களை யெல்லாம் கஅபாவைச்சுற்றிக் ல்வீடு கட்டிக்கொண்டு வசிக்கும்படி செய்தார். மனிதர்கள் சமூ வாழ்க்கையில் ஒற்றுமையுடன் வாழ்வதற்கு வேண்டிய சட்டதிட்டங்களை யெல்லாம் இவர் ஒழுங்காக ஏற்படுத்தி ஞர். அரபுநாட்டின் பல் வேறு பாகங்களிலு மிருந்து கஅபத்துல்லாவை நோக்கி யாத்திரையாக ர்கூடிய மனிதர்களுக்கு அன்னபானாதிகளை அளிக்கும் பொருட்டு அவற்றிற்கு வேண்டிய ரிப்பணத்தை (ரிபாதா) சூல் செய்தற்கு அவசியமான விதிமுறைகளை யெல்லாம் ஒழுங் காக நிர்மாணம் செய்து வைத்தார்.

குஸைஸ என்பவர் சுமார் ஈஸவி 480 ம் ஆண்டில் தேகவியோகமானார் அதன்பின் அவருடைய தானத் தை அவரது குமாரரான அப்துத்தார் என்பவர் கி லாயினர். அவர் ாலகதியால் சில ாலம் சென்று தே

*குஸைய என்பவர் ஈஸவி 398 ம் ஆண்டில் பிறந்தார்.

வியோகமான பின்னர் மக்காவின் ஆட்சியை ஏற்றுக்கொள்ளும் விஷயத்தில் அவருடைய வம்சத்தவருக்கும், அவருடைய சகோதரரான அப்துமனுபின் புத்திரர்களுக்குமிடையில் சச்சரவு ஏற்பட்டது. இது சம்மந்தமான சமாதான மொன்று செய்யப்பட்ட பொழுது மக்காவின் ராஜ்யாதிகாரமானது இருபிரிவாகப் பிளக்கப்பட்டது: மக்காவுக்குத் தண்ணீர் வரவழைத்துக் கொடுக்கவேண்டிய பொறுப்பும் (ஸிக்காயா), வரிப்பணம் வசூல் செய்துகொள்ள வேண்டிய அதிகாரமும் (ரிபாதா) அப்துமனுபின் குமாரரான அப்துஷ்ஷம்ஸ் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டன; ஆனால் கஅபாவைக் காப்பாற்ற வேண்டிய கடமையும் (ஹிஜாபா), ஆலோசனைச்சபையின் மண்டபத்தை மேற்பார்க்கவேண்டியதும் (நத்வா), ராஜாங்கச் சின்னமாகிய கொடியைத்தாங்குவதும் (அல்லிவா) அப்துத்தாரின் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

ஏழையான அப்துஷ்ஷம்ஸ் என்பவர் தம்முடைய அதிகார முழுவதையும் தமது சகோதரரும் மக்காவிலுள்ள ஒருபெரிய வர்த்தகருமான ஹாஷிம் என்பவரிடம் கொடுத்துவிட்டார். இவர் மக்காவில் மகா செல்வாக்குள்ளவர்; மேலும் தானதர்மம் செய்யும் விஷயத்தில் மகா தயாள குணமுள்ளவர். இவர்தாம் மாரிக்காலத்தில் எமன் தேசத்துக்கு ஒரு [illegible] ரும் கோடைக்காலத்தில் ஷாம் தேசத்துக்கு ஒரு கார்வானும் சென்று [illegible]ரும்படி ஏற்பாடுசெய்து மக்[illegible]த்து வியாபாரத்தை அதிகமா[illegible] விருத்தி செய்தார். இப்படிப்பட்ட ஹாஷிம் என்பவர் ஈஸவி 510ம் ஆண்டில் ஷாம் தேசத்திலுள்ள கஸ்ஸா என்னும் நகரில் மரணமாய்விட்டார்; இவருக்குப் பின்னே இவரது சகோதரரான தாராள கு[illegible] முள்ள (அல்மைஜ்) முத்தலிப் என்பவர் தம்

முடைய தமையனாரின் அதி காரத்தை ஏற்று 'கொண்டார். இவர் சிலகாலம் அதிகாரம் செலுத்திவிட்டு ஈஸவி 520 ம் ஆண்டில் காலமாய் விட்டார் இந்த முத்தலிப் என்பவர் ம்முடைய ஆளுகையின் போது, தமது தமையனான ஹாஷிம் என்பவருக்கு யதுரிப் (மதீனாவின் பழயபெயர்) என்னும் பட்டணத்தில் ஸல்மா என்னும் மாது சிரோ மணிக்குப் பிறந்திருந்த ஷைபா என்னும் குழந்தையை ம 'கத்துக்குக் கொண்டுவந்தார். ஆனால் ஷைபாவின் தந்தை ஹாஷிம் என்பதை அறிந்து கொள்ளாத மக்கத்து மனி தர்கள் அ'குழந்தையை முத்தலிபின் அடிமையென' ருதி அவருக்கு "அப்துல் முத்தலிப் என்று நாமஞ்சூட்டி விட்டார்கள். முத்தலிப் எமன் தே, சத்திலுள்ள க'வா னில் இறந்துபோனபின்னர் அப்துல்முத்தலிப் என்று பெயர் வழங்கப்பட்டுவந்த ஷைபா என்பர் மக்காவின் அதி காரத்தை வகிக்க முன்வந்தார்.

இதற்கிடையில் அப்துத்தாரின் பேரர்கள் மக்காவில் மிக் செல்வவான்களாகச் செருக்குமிக்கு வந்தார்கள். ஆனால் அதேநகரில் ஹாஷிமுடைய வம்சத்தார் தங்களைக் காட்டிலும் மிகுதமான செல்வாக்குடையவரா யிருப்பதை ' 'டு அப்துத்தாரின் ர்க்கத்தவர் மிகுதம் பொறாமை கொண்டு அன்னாரின் அதி காரத்தைப் பற்றிக்கொள்ளப் பிர யத்தனப்பட்டனர். அப்துஷ்ஷம்ஸுடைய குமாரரான பேராசைபிடித்த மையா என்பவர் அந்தக்கக்ஷியின் தலை மை ஸ்தானத்தை ஏற்றுவந்தார். ஆனால் அப்துல் முத்தலி பிடம் பொதுஜன ' ஞ 'இருந்த பிரியத்தினாலும் மரியாதை யினாலும் அவரே அந் ந ரின்தலைமையைச் செவ்வனே நித்துவந்தார். அ ருடைய கு விசேஷமும் பெருந்தன் மையுமே அவருக்கு இப்படிப்பட்ட நன் மதிப்பை உ '

ர கிவிட்டன. ஆதலின் கஃபாவின் மேற்பார்வை யென்னப்பட்ட ஹிஜாபா என்னும் சர்வாதிகாரமும் தண்ணீர் வரவழைத்துக் கொடுக்கவேண்டிய ஸிக்காயா என்னும் அதிகாரமும் அப்துல் முத்தலிபின் கையிலேயே வந்து சேர்ந்துவிட்டன. இதனாலும் உமையாவின் அசிகையானது அதிகரித்து வந்தது. ஆயினும் ஜனங்களுடைய நன்மதிப்பால் அப்துல் முத்தலிப் சுமார் ஐம்பத் தொன்பது வருஷங்கள் வரையில் அந்த மக்கமாநகரில் ஆட்சிபுரிந்து வந்தார்.

ஆண்டவனருளால் அப்துல் முத்தலிப் அவர்களுக்குப் பன்னிரண்டு குமாரர்களும் ஆறுகுமாரத்திகளும் ஜனனமானார்கள்; அவர்களுள் முக்கியமானவர்கள்: அபூலஹப் என்று மறுபெயர் வழங்கப்பெற்ற அப்துல் உஸ்ஸா என்பவர்; (இவர்தாம் நம்முடைய நபிகள் நாயகமவர்களை மிகுதம் துன்பப்படுத்தினர்); அப்துல் மனுபு என்று சொல்லப்படுகின்ற அபூத்தாலிப்; (இவர் ஈஸவி 540 முதல் 620 வரையில் ஜீவித்திருந்தார்); அப்துல்லா; (இவர் ஈஸவி 545-ல் பிறந்து 570-ல் மரணமானர்); அப்பாஸ்; (இவர் 566-ல் பிறந்து 652-ல் மரணமானர்). அப்துல்லாவின் தாயார் பெயர் பாத்திமா என்பதாகும்; இம்மாதரசியின் தந்தையார் அம்ர் என்று அழைக்கப்படுவார்.

அப்துல்லா என்பவர் யதுரிப் நகரத்திலுள்ள ஸொஹ்றியென்னும் வர்க்கத்தின் தலைவராகிய வஹப் என்பவருடைய குமாரத்தியாகிய ஆமினு என்னும் மாது சிரோமணியை மணந்து கொண்டார். அதற்கு மறுவருஷத்தில் எமன்தேசத்து மாகாணதிபதியான அல்அஷ்ரம என்று மறுபெயர் வழங்கப்பெற்ற அப்ரஹா என்னும் கிரிஸ்தவன் ஒருபெரிய ஹபஷிச் சேனையுடன் அபத்துல்லாவின்மீது படையெடுத்து வந்தான். இவ்வைபவம் அப்துல் முத்தலி

பின் ஆட்சியில் ஈஸவி 570 ம் ஆ ' டில் நிகழ்வுற்றது; அவ்வே ளையில் அப்ரஹா என்னும் அந்த எமன் தேசத்து மாகாணாதிபதி ஒருபெரிய யானையின்மீது சவாரிசெய்து வந்தான்; இந்த யானையென்னும் மிருகம் அந்த அரபிகளுக்கு ஒரு நூதனமான ராக்ஷஸப்பிராணியா யிருந்ததனால் ஹபஷிகளின் படையெடுப்பு ருஷத்துக்கு ஐயாமுல்பீல்' (அஃதாவது, ஆனையின் ஆ ' டு) என்று அந்த அரபிகள் பெயர்வைத்து விட்' ார்கள். அந்தயானை யுடைய படையுடையவர்கள் அப்பொழுது தெய்வ சோதனையா த் தோற் டிக்கப்பட்டு நாசமடைந்து போனார்கள்,

அப்துல்லா இந்த "ஐயா முல் பீலு க்கு முன்வருடத்தில் ஆமினாவை விவாகம் செய்துகொ ' டு பிறகு சிறிது ாலத்து 'குள் தம்முடைய இருபத்தைந்தாவது பிராயத்தில் தேகவியோகமாய்ப் போனார். அவருடைய மர த்துக்குச் சிலதினம் பின்னர் அந்த ஐயாமுல் பீல் ஆ ' டிலேயே ரபீயுல் அவ்வல்மாதம் பிறை 12 தி ' கட்கிழமையன்று (ஈஸவி 570, ஆகஸ்டுமாதம் 29ந் தேதியில்) ம ' மாநகரில் ஓர் ஆ ' குழந்தை திரு தாரம் புரிந்தது. அப்துல் முத்தலிபின் கடை 'குட்டி மகனாகிய அப்துல்லாவு ை ய மனைவியாயிருந்த ஆமினாவின் திருவயிற்றினின்றும் தோன்றிய அந்த ஆண் குழந்தைக்கு அதன் பாட்டனார் முஹம்மத் (பு ழப்பட்ட ர்) என்று நாமகரணம் சூட்டினார். அ 'குழந்தைக்கு ஆறு யதாம்பொழுது அன்னை ஆமினாவும் ால தியால் தேக வியோ மாய் விட்டார். அதன் பி ' அன்னையும் பிதாவுமற்ற அந்த வாலிபரைப் பாது ா ' ே ' டிய பொறுப்பானது அவருடைய பாட்டனார் அப்துல் முத்தலிபி ' மீதே சார்ந்து விட்டது. ஈஸவி 579 ம் ஆ ' டி ' அப்துல் முத்தலிப் இறந்தபோது

அவருடைய அதிகாரம் முழுதும் அவரது அருமைக் குமாரராகிய அப்துல்லாவின் அவர்களிடம் வந்து சேர்ந்ததே போல் இளம் பிள்ளையாகிய அந்த அகதியைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் அவர் மீதே சார்ந்து விட்டது இந்த அபூத்தாலிப் அவர்களுடைய குடும்பத்திலேயே நம்முடைய முஹம்மதானவர் (ஸல்) தம்முடைய பால்ய தசையைக் கழித்து வந்தார். இவ்வாலிபர் இனிய குணமும் எளிய நடையும் உடையவராயிருந்து எப்பொழுதும் முக மலர்ச்சியையும் அக மலர்ச்சியையும் அதிகம் படைத்திருந்ததனால் அவருடைய குடும்பத்தார்களும் அக்கம் பக்கத்திலுள்ளவர்களும் அவரை மிகுதம் நேசித்துவந்தார்கள். அவர் மகா சாந்தகுண சீலரும் தயாள மிக்க பாலருமாயிருந்ததனால் ஏழைகள் படும் துயரத்தைக்கண்டு பெரிதும் மனமுருகுவார். அவர் அதி பால்யத்திலேயே மகா மேதாவியாகவும் எல்லோரிடத்திலும் இனிய மொழி பேசும் பூர்வ பாஷியாகவும் இருந்துவந்தார். ஆயினும் அவருடைய வாலிபப் பிராயமானது முழுதும் இலேசான வாழ்க்கையாகவேயிருந்ததில்லை. அபூத்தாலிபானவர் தம்முடைய முன்னோர்களைப் போலில்லாமல் வியாபாரத்தினால் அதிமான நஷ்டத்தை யடைந்து சிறிது ஏழ்மைத் தனத்தைப் பெற்று விட்டபடியால் அவருடைய வீட்டிலிருந்த சிறுவர்களும் சிறுமிகளும் தங்களுடைய ஒட்டகம் ஆடுமுதலிய கால்நடைகளை மேய்க்கும்படியான தொழிலில் அமரும்படியான அவசியம் நேரிட்டு விட்டது.

மிகச் சிறு பிராயத்திலிருந்தே முஹம்மதானவர் (ஸல்) தனிமையான தியானத்தில் மூழ்கி விடுவது வழக்கம். ஒட்டகங்களை மேய்த்துக் கொண்டிருக்கும்போது மற்றைச் சிறார்களுடன் கூடி விளையாடாமல் ஏகாந்தமான

கற்பாறைகளின்மீது குந்திக்கொ ் டு இயற்கையின் இரக சியத்தைப் பார்த்துப் பார்த்து ஆனந்த தியானத்தில் அடிக்கடி ஆழ்ந்து விடுவார். இவர் தம்முடைய பெரிய தந்தையாகிய அபூத்தாலிப் அவர்களுடன் இரண்டு முறை வர்த்தகத்தினிமித்தம் ஷாம் என்னும் ஸீரியா நாட்டுக்குச் சென்றிருந்தார். அ ்கெல்லாம் மனிதர் ள்படும் துக் த் தையும் துயரத்தையும் கண்டு மிகவும் மனம் வருந்துவார்; அவர்களுடைய கஷ்ட ஜீவனத்தையும் நிஷ்டூரமான வாழ்க் கையையும் பார்த்து மிகவும் பரிதபித்து உள்ளங்கசிந்து உருகுவார்; இவர்களை யெல்லாம் மேன்மைக்குக் கொ ்டு வருதற்கு ஏதேனுமொரு வழியுண்டோ வென்று ஏங்கி நிற்பார். ஆயினும் இவருக்கு வியாபாரத்திலிருந்த சாமர்த் தியத்தையும் சாதுர்யத்தையும் கண்டு மக்கமா நகரிலிருந்த கதீஜாவென்னும்(ரலி) வர்த்தகமாது ஒருவர் இவரைத் தம்முடைய வியாபாரத்தில் சேர்த்துக்கொண்டார். கதீஜா வென்பவர் அந்நகரிலிருந்த ஒரு பெரும் ஸ்ரீமாட்டி; மேற் குலத்திற் பிறந்த பெருந்தன்மை வாய்ந்த ஒரு பெரு மாட்டி. அவருடைய வர்த்த த்தில் அபூத்தாலிபின் அரிய செல்வர் மிகுதமான இலாபத்தைக் ீட்டியபடியால் அவர் மீது கதீஜாவு ்கு மனப் பிரியம் அதிகமா யேற் பட்டது. அதன் பின் அவருடைய குணநிசயத்தைக் கண்டு அவருடைய மேன்மையில் அம்மாதரசி அதிகம் ஈடுபட்டு விட்டபடியால் அவர்களுக் கிடையில் அரியவிவா கம் ஒன்று நிகழும்படியான அவ்வளவு மனமுவப்பு நேரி ட்டு வி ் டது. அப்பொழுது ம்முடைய நாயக மவர்களு க்கு வயது 25. அம்மங்களகரமான மணமகருக்கும் மண மகளுக்கும் இடையில் பல குழந்தை ள் பிறந்தன. அவர் களுடைய ஆண் குழந்தை ளெல்லாம் அரியபால்யத்தி

லேயே ஆ ்டவன் வசம் சேர்ந்து விட்டார்கள்; ஆனால் அவர் ளுடைய பெண் குமாரிகள் மட்டும் தம்முடைய தந்தையாரின் பிற்காலத்திய பெருமைகளை யெல்லாம் பார்க்கும் வரையில் பிழைத்திருந்தார்கள். கடைப்பெ ணுகிய பாத்திமா அவர்களை ஆபூத்தாலிபின் அருமை குமாரராகிய அலீ (ரலி) அவர்களுக்கு விவாகமுடித்து வைத்தார்கள். இப் பெண்மணிக்கு அஸ்ஸஹ்றா (அழ கியமாது) என்றொரு பெயரு முண்டு.

நம்முடைய நாயகமவர்கள் தங்களுடைய விவாஹத் துக்குப்பின் பதினைந்து வருடங்கள் மட்டும் பொதுக் காரி யங்களில் அதிகமாகத் தலையிடாமல் ஏகாந்தமாகவே வசித் துவந்தார்கள்; ஆனால் அக்காலத்தில் இர ் டு முறையல்லா மல் மற்றைவேளைகளில் ப ர ் க்க காரியங்களில் தலையிட வேயில்லை. வியாபாரத்துக்காகவும் வெளியில் செல்வதை விட்டுவிட்டார்கள். விதவைகளையும் அகதிகளையும் திக்கற் றவர்களையும் காப்பாற்றும் பொருட்டு மக்கமாநகரில் அதற் குப் பல வருஷங்களுக்கு முன்னரே ஒரு சங்கம் ஸ்தாபி ்பட்டிருந்தது; அது நம்நாயகத்தின் காலத்தில் சிறிது சீர்கேடுற்றிருந்தது; அதை நாயகமவர்களே சரியான நிலை மையில் கொண்டுவந்து நிறுத்தினார்கள். மற்றொருசமயம் மக்காவில் ஒருவிதமான பெருத்த கலகம் ஏற்படும்போல் ாணப்ப ் டது: அரபிகளின் கோத்திரத்தாருக்குள் கஃபா வின் சுவரில் பதி ்கப்படவே ் டிய "ஹஜருல் அஸ்வத் என்னும் கல்லின் விஷயமா அப்பெரு ் கலகம் விளையு மென்று அதிக திகிலுடன் எதிர்பார ் ப்பட்டது. அவ் வேளையில் நமது நாயகமவர்கள் தங்களுடைய சமயோசித மான புத்திசாதுர்யத்தால் அப்படிப்பட்ட கலகமொன்றும் வாரமல் அதிசாமர்த்தியமாகத் தடுத்து விட்டார் ள். இந்த

இரண்டு ரரிய ளிலல்லாமல் மற்றெப்பொழுதும் அவர் கள் பகிர மா விஷய களில் தலையிட்டதேயில்லை. இவ்வாறு அவர் ள் ஏ ாந்தமான ாழ்க்கையிலிருந்து ந்த போதிலும் அ ர்களுடைய சாந்தகு ஒழுக்கத்தினாலும் ச ர்மார்க்க விசேஷத்தினாலும் நெறியான நியாயத்தினாலும் நீதமுள்ள நடத்தையாலும் அவர்களுக்கு அங்ககா ரசிகள் அல்அமீ (நம்பிக்கை க்குரியவர்) என்னும் சிறப்புப்பெயரொன்றையும் அளித்தார் ள் நம் நாயகம ர் ளிடத்திலிருந்த ஒரு சிறந்தகுணம் யாதெனின், அவர் ள் சிறுகுழந்தை ளை அதி மா அபிமானித்து வந்தார் ள்; ஆதலின் அவர்கள் வீட்டைவிட்டு வெளியில் வரும்போது சிறுகுழந்தைகள் கூட்டமாக வந்து அவர்களைச் சூழ்ந்து கொள்வது வழக்கம்; அப்பொழுது நாயகமவர்கள் அக்குழந்தைகளிடத்தில் முகமலர்ச்சியுடன் பிரியவசனம் சொல்லாமல் அப்பால் செல்வதில்லை; குழந்தைகளைக் கண்டு அன்புடன் புன்சிரிப்புச் செய்யாமல் ஒருபோதும் அவர் ள் சும்மாபோவதில்லை. ஒவ்வோர் ஆண்டிலும் ரமலான் மாதத்தில் அவர்கள் மக் ாவுக் கருகிலுள்ள ஹிராவென்னும் மலையிலுள்ள குகை யில் தனி திருந்தும் விழித்திருந்தும் தியா ம் செய் துவழ ம். அப்பொழுதெல்லாம் மனிதகோடி ளை முன்னுக்கு கொ டு வருதற்குரிய வழி யாதென அல்லும் ப லும் ஆ ரடவனிடம் குறையிரந்து கொண்டேயிருப்பார் ள்; அதனுடன் ஆத்மஞானத்துக்குரிய துறையும் யாதெ று உசாவிய மாகவே ால கழித்து ந ார் ள். அப்பொழுது ஒரு ரமலான் ாதத்தின் லலத்துல் த்ர் இரவி ஆ ட னருளால் அ ர்களுடைய ஹிருதயத்து கு ஞானோபதேசம் கொடு ப்பட்டது அந்த நுபுவ் த்து குப்பின் உலகத்த ரிடம் சென்று

தீனுல் இஸ்லாத்தை உபதேசம் புரியும்படியான ஆணையும்
ஆ டவனால் அளிக்கப்பட்டது. அன்றுமுதல் மனித
கோடிகளைப் பாதாளத்திலிருந்து உச்சஸ்தானத்துக்கு
உயர்த்துவதே நம் நபிபெருமானின் ஓயாத வேலையாயிரு
ந்து ந்தது. பொது ஜனங்களிடத்திலிருக்கும் தீய குணங்
ளை யெல்லாம் போக்கி அவர்களை நல்வழிக்குக் கொண்டு
வந்து ஆத்மஞான முன்னேற்றத்தில் முதிர்ச்சி யடை யும்
படி செய்வதே அவர்களுடை ய முக்கியவேலையாயிருந்து
வந்தது. மனிதர்கள் தமக்குள் ஒருவரோ டொருவர்
இன்னவாறு ந ந்து கொள்ள வேண்டுமென்பதும், அவர்
ள் ஆண்டவன் விஷயத்தில் இன்னவாறு ஒழுகிவர
வே டு மென்பதுமே அவர்களுடைய போதனையின் சார
மாயிருந்தது.

அவர்களுடை ய நுபுவ்வத்தை முதன்முதலில் ஏற்றுக்
கொண்டு முஸ்லிமானவர் அவர்களுடைய மனைவியார் கதீ
ஜாபீபி (ரலி) அவர்களேயாவார். அதன் பின்னர் அலீ
(ரலி), அபூபக்கர் (ரலி), உமர் (ரலி), ஹம்ஜா (ரலி), உதுமான்
(ரலி) முதலிய சிலர் தீனுல் இஸ்லாத்தில் சேர்ந்துகொண்
டார்கள். ஆனால் முஹம்மதுக்கு (ஸல்) நபிப்பட்டம் கிடை
த்த தென்பதை கேட்டுக் குறைஷ்குலத்தார் முதன் முத
லில் பரிகசமா ப்பேசி ஏளனம் செய்தார்கள். ஆனால் நபி
ள் நாயகமவர்கள் த களுடைய பிரசாரவேலையை விடா
மல் மேன்மேலும் தொடர்ச்சியாகச் செய்து வரும்போது
அந்தக்குறைஷ் குலத்தார்கள் நம்நபிபெருமானைத் த ளு
டைய ன்மவிரோதியாய்க் ருதத் தலைப்பட்டனர். பிறகு
பலவிதத்திலும் அவர் ளையும் அவர் ளைப் பின்பற்றிய ர்க
ளையும் அந்த எதிரி ள் துன்பப்படுத்தத் துணிந்து விட்
டனர். அ ர் ள் செய்துவந்த கொடுமையின் காரணமா

கச் சில முஸ்லிம்களும் உயிர்துறக்கும்படியான அசம்ப மும் நேரிட்டது. குறைஷ்குலக் காபிர்கள் படுத்திவைத்த பாட்டை இம்மட்டு அம்மட்டென்று வரையறுத்துக் கூறு வது முடியாது. நுபுவ்வத்து கிடைத்த பின் சில ருஷங்கள் வரையில் அம்முஸ்லிம்கள் பட்ட கஷ்டத்தினால் அவர் ளுள் பலர் ஹபஷ்தேசத்துக்கு ஹிஜ்ரத் சென்று தம்மைப் பத்திரப்படுத்திக் கொள்ளும்படியான அவசியம் நேரிட்டு விட்டது. ஆனால் நபிகள் நாயகமும் மற்றும்சிலரும் மட்டுமே மக்கத்தில் தைரியமாகத் தங்கி விட்டார்கள். ஆயினும் அபூத்தாலிபும் கதிஜாவும் (ரலி) உயிருடனிருக்கு மட்டும் குறைஷிகளின் கொடுமையும் சிறிது குறைவுபட்டிருந்தது; ஆனால் அவர்களிருவருடைய மரணத்துக்குப் பின்னரே முஸ்லிம்களுக்குப் பொறுக்க முடியாத துன்பங்களெல்லாம் இழைக்கப்பட்டு வந்தன. நபிபெருமானின் நாயகியாரும் பெரிய தந்தையும் மக்காவில் உயிருடனிருந்த மட்டும் அவர்களுடைய செல்வாக்குக்குப் பயந்து குறைஷ்குலக்கா பிர்கள் சிறிது அஞ்சிக்கொண்டிருந்தனர். ஆனால் அவர் ளுடைய தேக வியோகத்துடன் அப்படிப்பட்ட அச்சமா னது அந்தக் காபிர்களுடைய மனத்தைவிட்டு அடியோடு ஒழிந்துபோய் விட்டது. மக்கத்துக் காபிர்களின் கொடுமை யானது மிகுதமாகத் தலை விரித்துத் தாண்டவமாடத் தொடங்கிவிட்டபடியால் நபிகள் நாயகமவர்கள் அவ்வூரை விட்டு அடுத்த ஊராகிய தாயிபுக்குச் சென்று அங்கே யா வது உபதேசம் புரியலாமெனத் தொடங்கினார்கள். அங் கேயும் மக்கத்து விரோதிகளின் துர்ப்போதனையைக் கேட்டுவிட்டு அங்குள்ளவர்கள் நபிகள் நாயகமவர்களை கல்லாலடித்துத் துரத்திவிட்டார்கள். காலில் இரத்தம்வடி யப் பாதசாரியாய் நபிபெருமானார் மிகவும் மனமுடைந்து

சென்றவழியே திரும்பிவந்து விட்டார்கள். அதன்பின் நபிகள் நாயகமவர்கள் சிலகாலம் மக்கத்திலேயே தங்கியிருந்துகொண்டு சில சமயங்களில் மட்டும் வெளியில் வந்து நல்லுபதேசம் புரிந்து வந்தார்கள். ஹஜ்ஜு மாதத்தில் அயலூர்களிலிருந்து மக்கத்துக்கு யாத்திரையாக வருபவர்களிடம் தங்களுடைய இஸ்லாமார்க்கத்தைப் போதித்து வந்தார்கள்; அயலூர்களிலிருந்து யாத்திரையாக வருபவரேனும் ஆண்டவனுடைய வேதத்தைக்கேட்டு அச்சங்கொண்டு தீமையை விட்டு நல்வழியில் வரக்கூடுமென்னும் நல்லெண்ணத்துடன் இவ்வாறு யாத்திரீகர்களைக்கண்டு உபதேசம் புரிந்து வந்தார்கள்.

இவ்வாறு பலகாலும் உபதேசித்துவரும்போது யதுரிப் என்னும் பட்டணத்திலிருந்து மக்கத்துக்கு யாத்திரையாக வந்திருந்த சில மனிதர்கள் நபிபிரானின் நல்லுபதேசத்தைக் கேட்டு மனமுருகி நேர்வழியிலானார்கள். தாங்கள் விக்கிரகங்களை ஆராதனை புரிவதில்லையென்றும், விபசாரம் செய்வதில்லையென்றும், மதுபானமாவது மற்றெந்தக் கொலைகளவு முதலிய குற்றங்களையாவது செய்வதில்லையென்றும், ஆண்குழந்தைகளைத் தங்கள் விக்கிரகங்களுக்குப் பலிகொடுப்பதில்லையென்றும், பெண் குழந்தைகளை உயிருடன் மண்ணில் புதைப்பதில்லையென்றும், தங்கள் தகப்பனுடைய மனைவிகளைத் தாரமாய்க் கொள்வதில்லையென்றும் வாக்குறுதி செய்து கொடுத்தார்கள். இவர்கள் தங்களுடைய சொந்த ஊருக்குத் திரும்பிச் சென்றவுடன் அங்கெல்லாம் நபிகள் நாயகத்தின் பெருமையைப்பற்றிப் பேசத்தொடங்கினார்கள். தங்களைப் புராதன பாமரத்தன்மையிலிருந்து நூதன நாகரிக நிலைமைக்குக் கொண்டுவருவதற்காகத் திருநபியொருவர் மக்கமாநகரில் தோன்றியிருக்

கும் விஷயத்தை அந்த யதுரிப் நகரமுழுதும் பரத்தினார்கள். அதை கேட்ட அரபிகள் அனேகர் அடுத்த ஆண்டில் மக்கத்துக்கு வந்து தாங்களும் தீனுல் இஸ்லாத்தில் சேர்ந்துகொண்டு பரிசுத்தர்களானார்கள். அதன்பின் ஈஸவி 622ம் ஆண்டில் யதுரிப் நகரத்திலுள்ளார்கள் நபிகள் நாயகமவர்களைத் தங்களுடைய பட்டணத்துக்கு அழைத்து வரும்படி தூதர்களை அனுப்பிவைத்தார்கள். அரபு நாட்டில் மக்கமாநகருக்கு எதிரிடையாக அந்த யதுரிப் நகரம் இருந்து வந்ததனால் அங்குள்ளவர்கள் இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டு முஹம்மதுநபியையும் (ஸல்) தங்களுடைய ஊருக்கு அழைக்கிறார்களென்னும் சமாசாரத்தை கேட்டவுடன் குரைஷ்குலக் காபிர்களுக்குண்டான கோபாக்கினிக்கோர் அளவில்லை. நாயகத்தின்மீதும் அவர்களுடைய சிஷ்யர்கள்மீதும் அந்தக்கொடு காபிர்கள் கொண்டுள்ள ஆத்திரத்தையும் க்ஷாத்திரத்தையும் அளவிட்டு கூறுவதென்றால் அது அரிதினும் அரிதாயிருக்கும். முஸ்லிம்களுள் பலர் மிகத்தந்திரமாக யதுரிபுக்குச் சென்று சேர்ந்தார்கள்; அங்கே அவர்களை அந்நகரவாசிகள் அதிமான பக்ஷத்துடன் அன்பாய் நடத்தலாயினர். ஆனால் இவ்விஷயத்தை மக்காவிலுள்ள குரைஷ் குலக்கொடுமையாளர் கேள்வியுற்றவுடன் நபிகள் நாயகத்தை கொலைபுரிந்து விட்டால் அவர்களுடைய விஷமத்தனமானது அடியோடு ஒழிந்துபோகுமென்று தமக்குள் தீர்மானம்செய்து கொண்டார்கள். அப்பொழுது நம்முடைய நபி பெருமானார்மட்டு அபூபக்கர் ஸித்தீக்குடனும் (ரலி) அலீயாருடனும் (ரலி) தனியே சித்து ந்தார்கள். அ லையில் அல்லாஹுத் தஆலாவினருளால் அந்த காபிர்களுடைய கொலைபாதகத்தனமான தந்திர சூழ்ச்சியைத் தெரிந்து

கொண்டு நபீகரீம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் இனி மக்கத்தைவிட்டு வெளியேறி விடுவதே நியாயமான வழி யென்று தீர்மானித்துக் கொண்டார்கள். ஆதலின் அவ்வருஷம் ரபீயுல் அவ்வல் மாதம் பிறை நான்கில் நபிகள் நாயகமவர்கள் அலீயாரைமட்டும் பின்னேவிட்டு விட்டுத் தாங்களும் அபூபக்கர் ஸித்தீக்கும் நள்ளிரவில் புறப்பட்டு மக்கத்தை யடுத்துள்ள தௌர் என்னும் குகைக்குள் சென்று தங்கினார்கள். குரைஷிகள் இதைத் தெரிந்து கொண்டவுடன் அலீயாரை அதிகமான துன்பத்திற் காளாக்கி விட்டு அதற்குமுன் தப்பிவிட்ட அவ்விருவரையும் தேடிச் சென்றார்கள்; நாலுபக்கங்களிலும் காலாட்களும் குதிரை வீரர்களும் பறந்து பறந்து ஓடினார்கள். பலமனிதர்கள் நபிகள் நாயகம் தங்கியிருந்த குகை யடிவாரத்திலும் தேடிக்கொண்டு வந்தார்கள்; அந்தக் குகையைச் சுற்றிலும் அவர்கள் தேடித்தேடித் திரிந்தார்கள்; தௌரின் வாயிலில் ஆள் நுழையக்கூடிய அவ்வளவு விசாலமான வழியொன்றும் இல்லாமையாலும் அங்கிருந்த சிறு வழியில் நூலிழைப் பூச்சிகள் நூல் நூற்றிருந்தமையாலும் அங்குவந்த எதிரிகள் அதற்குள் எட்டிப்பார்த்து விட்டு அப்பால் சென்று விட்டனர். அப்பொழுது அதற்குள்ளிருந்த இருவருடைய நிலைமையும் என்னவாயிருக்குமென்று நினைக்கின்றீர்கள்! குகை வாயிலில் கொலைபாதகர்களான எதிரிகளின் காலடிச்சப்தம் கேட்டபோது உள்ளேயிருந்த அபூபக்கர் (ரலி) நபிகள் திலகத்தைப் பார்த்து, 'யாரஸூலுல்லாஹ்! நாம் இருவர்தாமே யிருக்கிறோம். அவர்கள் பலபேராயிருக்கிறார்களே; அவர்கள் நம்மைக்கண்டு கொண்டால் என் செய்வோம்?' என்று அதி ஆயாசத்துடன் மனக்கிலேச முற்றுக் கூறினார். கொலைபாதகர்களின் அதி

சமீபத்திலிருந்து கொண்டும் அப்படிப்பட்ட அபாய ர மான வேளையில் நபிகள் பெருமானாரவர்கள், 'யாஸித்தீக்! நாம் இருவர்மட்டு மிருக்கிறோ மென்று அச்சப்படவேண் டாம்; நாம் இருவராயில்லை; நம்முடன் மூன்றாவதாக ஒரு ன் இருக்கிறனென்பது மக்குத் தெரியவில்லையா? நம' குத்துணையா அல்லாஹுத் தஆலா இருக்கும்போது ஏன் நாம் கிலேசப்படவே 'டும்? என்று தைரியமாக மறு மொழி கூறினார்கள்.

எதிரிகள் தேடிப்பார்த்துத் திரும்பிய பின்னர் நாயக மும் ஸித்தீக்கும் அ 'கே மூன்று நாள் த 'கிவிட்டு மூன் றும் பகல் மாலையில் அதைவிட்டு வெளிப்போந்தார்கள். அ 'கிருந்து இரண்டு ஒ 'டகங்களைச் சேகரம் செய்து கொண்டு அதிக துரிதமாகப் பிரயாணம்செய்து ஒருநாள் வெள்ளிக்கிழமை யன்று (2-7-622 ஈஸவி) யதுரிப் நகரத் துக்குள் இறைவனருளால் பத்திரமாக வந்து சேர்ந்தார் கள். இதுதான் ஹிஜ்ரத் என்று தேச சரித்திரங்களில் கூறப்படுகின்றது; இந்த ஹிஜ்ரத்திலிருந்துதான் முஸ்லிம் களின் காலகணிதமென்னும் ஹிஜ்ரி ஆண்டின் கணக்கு ஆரம்பமாகின்றது*.

---

*ஹிஜ்ரத்துக்குப் பின்னால் பதினேழு வருஷங்கள் சென்ற பிறகே இரண்டாவது கலீபாவான உமருப்னுல் கத்தாப் (ரலி) அவர் களுடைய ஆ 'சியில்தான் முஸ்லிம்களின் சகாப்தமானது ஹிஜ்ரத் திலிருந்து கணிக்கப்பட வேண்டுமென்னும் அரசாங்க அறிக்கையா னது வெளிப்படுத்தப்பட்டது. அப்பொழுதும் நபிகள் நாயகமவர் ள் ஹிஜ்ரத்துப் புறப்ப 'ட அந்தத் தேதியிலிருந்து 'ஹிஜ்ரி ஆரம்பிக்கவில்லை. நபிகள் நாயகமவர்கள் ரபீயுல் அவ்வல்மீ பிறை 4 ஞாயிறன்று மக்கமா நகரைவிட்டுப் புறப்பட்டு அம்மாதம் 16உ யாகிய வெள்ளிக்கிழமை யன்று [கி-பி. 622, ஜுலை 2உ] மதின

அத்தியாயம்—3.

நபிகள் பிரானும் மதீனவாழ்க்கையும்

அல்லாஹ்வுக்காகவும் அவனுடைய ரஸூலுக்காகவும், சரீரவாழ்க்கையைக்காட்டிலும் ஆத்ம வாழ்க்கையே சிறந்ததெனக்கொண்ட மக்கத்து முஸ்லிம்கள் தங்களுடைய சொந்த ஊரையும் சுற்றத்தாரையும் மற்றுமுள்ள ஸொத்து ஸ்வதந்தரங்களையும் துறந்துவிட்டு ஆண்டவனுடைய நேர்வழியே பெரிதென்று கொண்டு யதுரிப் நகரத்துக்குள் வந்து சேர்ந்தவுடன் அந்நகரத்திலுள்ளவர்கள் எல்லாவிதமான மேதைமரியாதையுடனும் அன்னவரை அன்புடன் ஏற்று ஆதரிக்க முன்வந்தனர். இவ்வாறு மக்காவிலிருந்து அங்குச்சென்று அடைக்கலம் புகுந்தவருக்கு "முஹாஜிரீன்" என்று பெயர்வழங்கலாயிற்று. இப்படிப்பட்ட திக்கற்ற முஸ்லிம்களை அன்புடன் ஏற்றுக்கொண்ட அந்நகரவாசிகளுக்கு "அன்ஸார்"கள் என்று நாமம் சூட்டப்பட்டது. இப்பெயரின் பொருள் "உதவிபுரிவோர் என்பதாகும். அதுவரையில் அதற்குமுன் நெடுங்காலமாக வழங்கப்பட்டு வந்த "யதுரிப் என்னும் அந்நகரத்தின் பெயரானது திருநபியவர்களின் பெருவிஜயத்தின் ஞாபகார்த்தமாக மதீனத்

மாநகர் சென்று சேர்ந்தார்கள். ஆனால் அதற்குப் பின்னே 17 ஆண்டுகள் கழிந்த பிறகு ஹிஜ்ரிக் கணக்கு நிலை நிறுத்தப்பட்டபோது ரபீயுல் அவ்வல் 4௳ யிலிருந்து ஆரம்பம் செய்யாமல் முஸ்லிம்வருஷத்தின் முதல் மாதமாகிய முஹர்ரம் 1௳ யிலிருந்து கணிக்கத் தொடங்கினார்கள்.

ணநபீ, அல்லாது, 'நபிபெருமானின் நகரம் என்று அன்றுமுதல் மாற்றப்பட்டு விட்டது; இதற்குச் சுருக்கமாக மதீனு என்றும் பெயர் கூறுவர். இப்பெயர்தான் இன்றளவும் இந்நகரின் பெயராக வழங்கப்பட்டு வருகின்றது. நபிகள் நாயகமவர்கள் அந்நகரில் தங்களுடைய திருக்கரத்தின் உதவியைக் கொண்டு மண்ணாலும் பச்சைவெட்டுச் செங்கல்லாலும் ஒருமஸ்ஜிதை (பள்ளியை) கட்டி முடித்தார்கள்; அதன் மேற்கூரையானது பேரீச்சமரத்தின் மட்டைகளால் வேயப்பட்டு அதன் மீது மண் போடப்பட்டிருந்தது. அந்தச் சர்வ சாதாரணமான பள்ளிவாயிலுக்குள் நின்று கொண்டுதான் நபிகள்நாயக மவர்கள் தங்களுடைய எளிய இஸ்லாமார்க்கத்தைப் போதிக்கத் தொடங்கினார்கள். அல்லாஹுத் தஆலாவின் அன்பையும் அருளையும் அவனுடைய அருமையான பெருமையையும் மிகுதமாகக் கூறுவதோடு அம்மனிதர்களுக்கு வேண்டிய நன்மார்க்க ஒழுக்கங்களையும் அதிகமாகப் போதித்துவந்தார்கள்; அவர்கள் கொலையையும் களவையும் கள்ளையும் கள்ளையையும் விட்டுவிட வேண்டுமென்றும் மாதராடவர் தமக்குள்மிகப்பரிசுத்தத்துடன்நடந்துகொள்ளவேண்டுமென்றும் அடிக்கடி உபதேசம் புரிந்துவந்தார்கள்; இன்னும் சூதும் கவராடலும் சிசுஹத்தியும் ஸ்திரீஹத்தியும் மகாதோஷமான காரியங்களென்று விடாமல் சொல்லிக்கொண்டே யிருப்பார்கள். மனிதவர்க்கத்தார் ஒருவரித்தில் மற்றொருவர் சகோதர வாஞ்சையுடன் நடந்துகொள்ளவேண்டுமென்றும் விதவைகளையும் வேறு திக்கற்றவர்களையும் அன்புடன் ஆதரிக்கவேண்டுமென்றும் அவர்கள் நற்புத்தி புகட்டிவந்தார்கள். இம்மட்டோடில்லாமல் மனிதனல்லாத மற்றப்பிராணிகளிடத்திலும் பக்ஷம் பாராட்ட

வேண்டுமென்பதையும் அவர்கள் அம்மனிதர்களுக்கு ஞாபக மூட்டமறந்து போனதில்லை.

